2024 – அக்டோபர் மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 310/2019 c/w 309/2019*

*2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 3, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 3, சீனித்துரை |
| தகப்பனார் பெயர் | : | தவசிகண்ணு |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பெரம்பலூர் அரசு மருத்துவமனை பதிவறை எழுத்தர் |
| வயது | : | 49 |

**தேதி: 24.10.2024.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். MCOP No.309/2019 ன் மனுதாரர் மணிகண்டனின் விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.8** ஆகும். MCOP No. 310/2019ன் மனுதாரர் வீரதுரை என்பவரின் விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.9** ஆகும். வீரதுரை என்பவருக்கு ம.சா.ஆ.9 ன்படி அதிக காயம் என்பதால் அவரை உடனடியாக மேல்சிகிச்சைக்கு திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மணிகண்டனிற்கு எங்கள் மருத்துவமனையில் தான் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை:– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் முதல் விசாரணையில் கூறியிருக்கும் தகவல்களை எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பார்த்து சொல்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மருத்துவர் என்ன சிகிச்சை அளித்து விவரங்களை

சொல்லியுள்ளார் என்று என்னால் கூற இயலாது என்றால் சரிதான். சிசிச்சை எங்கள் மருத்துவமனையில் அளிக்கப்பட்டதா என்றால் காயம்பட்டவர் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காயம் அடைந்த மணிகண்டன் எங்கள் மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டு அதே மருத்துவமனையிலேயே சிகிச்சையும் எடுத்துக் கொண்டார். மணிகண்டன் எத்தனை நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்று எனக்கு தெரியாது.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**